**சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)**
**திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்**
**MCOP . No.201/2025**

ம.சா.1 ஜெகன் த/பெ சின்னசாமி நாள் : 13.08.2026

**2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

3 ஆம் மனுதாரர் ஜெயஸ்ரீ என் மகனின் மூத்த சகோதரி. அவருக்கு திருமணமாகி சென்னையில் வசித்து வருகிறார். 4 ஆம் மனுதாரர் சிபியாஸ்ரீ, அவருக்கு திருமணமாகவில்லை. நான் கூலி வேலை செய்துவருகிறேன். 100 நாள் வேலைக்கு செல்வேன், விவசாய வேலைக்கும் செல்வேன். இறந்த என் மகன் பெயிண்டராக வேலை செய்து வந்தார். அவருக்கு இறக்கும் போது 22 வயது. பெயிண்டராக வேலை செய்ததால் அரசாங்கத்தில் அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. பெயிண்டராகவும், சுயதொழில் செய்ததாகவும் ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை. மனுவில் எந்த சுயதொழில் செய்ததாக குறிப்பிடவில்லை என்றால் தெரியவில்லை. வழக்கில் அதிக நஷ்டஈடு வேண்டி அவர் பெயிண்டராகவும், சுயதொழில் செய்ததாகவும் தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யாததால் மனு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல. என் மகன் அமர்ந்து சென்ற வாகனத்தின் ஓட்டுநர் ரவிசங்கரின் ஓட்டுநர் உரிமத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 3 ஆம் எதிர்மனுதாரர் ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். அந்த வாகனத்திற்கு காப்பீடும் இல்லை என்றால் சரிதான். நான் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. இரண்டு வாகனங்கள் மோதிக்கொண்டதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். நானோ அல்லது ரவிசங்கரின் குடும்பமோ புகார் கொடுக்காததால் 3 ஆம் எதிர்மனுதாரர் ரவிசங்கர் மீது புகார் கொடுத்துவிட்டார் என்றால் தெரியவில்லை. நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள தொகை மிக அதிகம் என்றால் சரியல்ல. ரவிசங்கருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லாததால் நஷ்டஈடு வழங்க 2 ஆம் எதிர்மனுதாரர் கடமைப்பட்டவரல்ல என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டு, சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென்று கையொப்பம் செய்தார்.

ஓம்/.S.மைதிலி,
சிறப்பு சார்பு நீதிபதி,
திருப்பத்தூர்.